# மறுபடியும் கூறுதல்– அல்லது நினைவூட்டுதல்? (25:1–12)

*அதிகாரம் 25ஐ முதன்முதலாகப் படிக்கையில் கொட்டாவி விடும்படியாக நாம் சோதிக்கப்படுகின்றோம். இவை எல்லாவற்றையும் நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம்: விசாரணையில் பவுல், பலவீனமான ஒரு தேசாதிபதி, பழி வாங்கும் ஆலோசனைச் சங்கம், மிகக் கொடூரமான சூழ்ச்சி. உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் மறு ஒளிபரப்புகள்* (reruns) *என்பவை எனக்குப் பிரியமானவைகள் அல்ல. சில மக்கள் புத்தகங்களை மறுபடியும் மறுபடியும் வாசிக்கவும், திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் பார்க்கவும் விரும்புகின்றார்கள், ஆனால் நான் அப்படிச் செய்வதை விரும்புவதில்லை.*[1] *இருப்பினும் மறுபடியும் ஒன்றை நான் வாசிக்கவோ அல்லது கவனிக்கவோ நேர்ந்தால், முதல் முறை நான் கவனிக்கத் தவறிய அல்லது கவனித்தும் மறந்து போன விஷயங்களைக் காண்பது என்னுடைய மாறாத பழக்கமாகும். அதிகாரம் 25 அதைப் போன்றதேயாகும். "அதே பழைய வரலாறு" மீண்டும் இதில் கூறப்படுவதாகக் காணப்பட்டாலும், நன்கு கவனித்தால், இதில் நீங்கள் புதிய சிந்தனைகளையும் சத்தியங்களையும் கண்டறியலாம்.*

## *மறுபடியும் கூறுதல் மட்டுந்தானா? (25:1-9)*

***அதே பாத்திரங்கள் (வ. 1, 2)***

*அதிகாரம் 24ல் வரலாறு தொடங்கியது போலவே இவ்விடத்திலும் வரலாறு தொடங்குகின்றது. இதில் திறவு*

கோல் பங்கேற்பாளர்களில் ஒருவராயிருந்தவர் ரோம அதிகாரி யாவார் - இவர் வேறொரு நபராய் இருந்த போதிலும் ரோம தேசாதிபதியாய் இருந்தார். அதிகாரம் 24ன் கடைசி வசனத்தில், “பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய்ப் பொர்க்கியு பெஸ்து தேசாதிபதியாக வந்தான்” (24:27ஆ) என்று கூறப் பட்டுள்ளது. இந்த அதிகாரம், “பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து” (25:1அ) என்று தொடங்குகின்றது.

பெஸ்துவைப் பற்றி நாம் அதிகமாய் அறியவில்லை. அவர் ரோமாபுரியில் இருந்த பிரபுக்களின் குடும்பங்கள் ஒன்றின் உறுப்பினராய் இருந்திருப்பார் என்பது உறுதி. இவர் ஞான மான, நேர்மையான மற்றும் ஒப்புக் கொள்ளும் பண்புகள் கொண்டவராயிருந்தார் என்று வரலாற்றாளராகிய யோசிப் பஸ் அவர்கள் விளக்கினார். இவர் தனக்கு முன்பிருந்தவர்கள் (ஆட்சியாளர்கள்) மற்றும் தமக்குப் பின் வந்தவர்கள் (ஆட்சியாளர்கள்) யாரைக்காட்டிலும் அதிக நீதியுணர்வும், மிதமான போக்கும் கொண்டிருந்தார் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இவர் யூதேயா மாகாணத்தில் இருந்த திருடர்கள் மற்றும் கொலைகாரர்களை ஒழிக்கும் பணியை அதிகமாய்ச் செய்தார் என்றும் யோசிப்பஸ் கூறினார். துரதிர்ஷ்டவசமாக இவர் பதவி ஏற்று இரண்டு ஆண்டுகளான போது இவர் மரணமடைந்தார். பேலிக்ஸ் மற்றும் பெஸ்து ஆகியோர் ஒவ்வொரு அம்சத்திலும் ஒன்றுபோலானவர் களல்ல; ஆனால் பலஸ்தீனத்தில் ரோம தேசாதிபதிகள் என்ற வகையில் - நாம் காணப்போகின்றபடி - இவ்விருவருமே யூதர் களைச் சாந்தப்படுத்த விருப்பம் கொண்டிருந்தார்கள்.

தொடக்கத்தில், ஒரு நல்ல தேசாதிபதியாயிருக்க வேண்டும் என்ற பெஸ்துவின் தீர்மானமானது நம் உள்ளங்களில் அதிக மதிப்பை ஏற்படுத்துகின்றது. அவர் அந்த நாட்டிற்கு வந்து மூன்று நாட்களேயான பிறகு, அவர், “... செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனார்” (வ. 1ஆ). எருசலேமில் இருந்த யூதத்தலைவர்களைப் பெஸ்து உடனடியாகச் சந்திப்பதற்குப் பல காரணங்கள் இருந்தன: அவர் அவர்களுக்குத் தம் மரியாதையைச் செலுத்த வேண்டியிருந்தது (வசனம் 13ஐக் காணவும்). அவர் அவர்களை அறிய வேண்டியிருந்தது; மற்றும் அவர்களும் அவரை அறிய வேண்டியிருந்தது. அவர்களுடைய மாபெரும் அக்கறைக்குரியவர்களை அவர் கண்டறிந்து, அவை

*களை நிறைவேற்றுவதாக அவர் உறுதியளிக்க வேண்டி யிருந்தது. மிக முக்கியமாக, அவர் தமது மாபெரும் அறை கூவலைச் சந்திக்க வேண்டுமென்றால், அவர்களின் ஒத்து ழைப்பு அவருக்குத் தேவையாயிருந்தது: யூதேயாவில் இருந்த அரசில் மற்றும் சமூக ரீதியான அமைதியின்மை என்பதே அம்மாபெரும் அறைகூவலாகும்.*

*பெஸ்து எருசலேமை அடைந்த பொழுது, நடபடிகளில் நாம் அடிக்கடிக் காணும் காட்சியொன்றை அவர் சந்தித்தார்: "பிரதான ஆசாரியனும், யூதரில் முதன்மையானவர்களும்" (வ. 2அ) - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சனதெரீன் சங்கத்தார். கடந்த விசாரணை நடந்த இரண்டு ஆண்டுகளில் சங்கத்தின் தலைவர் மாறியிருந்தார். அனனி யாவுக்குப்[2] பதிலாக (23:2; 24:1) இப்பொழுது இஸ்மவேல்[3] பிரதான ஆசாரியராய் இருந்தார். இருப்பினும் இஸ்மவேலும் அனனியாவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் போல இருந்தார்கள்; இவரும் கொடுமையானவராகவும், சுயநலந் தேடுபவராகவும் இருந்தார்.*

*நாட்டின் விஷயங்கள் பற்றி யூதத்தலைவர்களும் விவாதிப் பதற்காக பெஸ்து அமர்ந்த பொழுது, அவர் ஒருவேளை, வீழ்ச்சியுறும் பொருளாதாரம், குற்றங்கள் அதிகரிப்பு, அவர் களின் எண்ணப்படி ரோமரின் அநீதிகள் போன்றவற்றைப் பேசும்படி எதிர்பார்த்திருந்திருப்பார். அதற்குப் பதிலாக, அவர்களின் திட்டத்தின் முதன்மையாக இருந்தது நீதிமன்றத் தில் இன்னும் முடிவாகாத ஒரு வழக்கைப் பற்றியது என்பதை அறிந்த அவர் ஆச்சரியப்பட்டார். அவ்வழக்கானது பேலிக்ஸ் அவர்கள் செசரியாவின் சிறையில் அடைத்து விட்டுப் போன கூடாரத் தொழில் செய்யும் ஒரு கிழவனைப் பற்றியதா யிருந்தது (24:27)! "அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராது பண்ணி" (25:2).*

*அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி தேசாதிபதி பின்னால் இவ்விதம் அறிக்கை தயாரித்தார்: "நான் எருசலேமில் இருந்த போது, பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர் களும் அவனை[பவுலை]க் குறித்து என்னிடத்தில் பிராது பண்ணி, அவனுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்ய வேண்டு மென்று[4] கேட்டுக் கொண்டார்கள்" (வ. 15).[5] யூதர்கள்,*

*"... இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள்" (வ. 24) என்று அவர் கூறினார். ஒரு வேளை அவர்கள் பவுலைத் தங்களிடத்தில் ஒப்படைக்கும்படி அவரைக் கேட்டிருக்கலாம். பெஸ்துவிடம் அவர்கள், "பேலிக்ஸ் அந்தக் கலகக்காரனை எங்களிடத்தில் ஒப்பு வித்திருக்க முடியும், ஆனால் அந்தக் கை தேர்ந்த அரசியல் வாதிக்கு நீதியைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகின்றது.*

*விசாரணையின்றி பெஸ்து ஒரு குற்றத் தீர்ப்பு அளிக்கும்படி அவர்கள் விரும்பினார்கள், ஆனால் அவரோ, "குற்றஞ்சாட்டப் பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டின வர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல" (வ. 16) என்று பதில் கொடுத்தார். சிறை வைக்கப்பட்டிருக்கும் மனிதர் ஒருவர் எவ்வளவு பயங்கரமான குற்றங்கள் செய்திருந்தாலும், அவருக்கு நேர்மை யான விசாரணையைக் கோர உரிமையிருக்கின்றது என்றே ரோமச் சட்டம் கூறியது!*

### *அதே சூழ்ச்சி (வ. 2-5)*

*நீதியின் உணர்வுடன் செயல்படும் ரோம அதிகாரியுடன் தாங்கள் பேசியதை உணர்ந்த சங்க உறுப்பினர்கள் ஆச்சரியப் பட்டிருக்க வேண்டும். இருப்பினும், அவர்கள் இரண்டாவது திட்டமொன்றைத் தயாராக வைத்திருந்தார்கள். தேசாதிபதி விசாரணையை எருசலேமில் வைப்பதாக இருந்தால் அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளத் தயாராயிருந்தார்கள். அவர்கள், "பவுலுக்கு விரோதமாய்ப் பிராது பண்ணி, ... தங்கள்மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டு மென்று வேண்டிக் கொண்டார்கள்" (வ. 2ஆ, 3). அது ஒரு நியாயமான வேண்டுதலாகக் காணப்பட்டது. தேசாதிபதி தமது நீதி விசாரணையை செசரியாவிலோ அல்லது எருசலேமிலோ நடத்த முடியும் (யோவா. 19:13ஐக் காணவும்), எனவே ஏன் எருசலேமில் வைத்துக் கொள்ளக்கூடாது?*

*"தயவு செய்து" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். "தயவு செய்து" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை*

யானது பல மொழிபெயர்ப்புக்களில் "சலுகை செய்து" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. கிஸ்ட்மேக்கர் அவர்கள், "சலுகை என்ற வார்த்தையானது ... ஒருமைச் சொல்லில் quid pro quo (ஒன்றுக்குப் பதில் ஒன்று செய்தல்) என்ற கருத்தை வெளிப் படுத்துகின்றது" என்று சுட்டிக்காட்டினார். தேசாதிபதியிடத் தில் யூதர்கள் பின்வரும் இறுதி அறிவிப்பைச் செய்தார்கள்: "நாங்கள் உமக்கு உதவ வேண்டுமென்று நீர் நினைத்தால், நீர் முதலில் எங்களுக்கு உதவும். பவுலை எங்களுக்குத் தாரும்."[6]

மேம்போக்காகப் பார்த்தால், யூதர்கள் நியாயத்தை வேண்டி நின்றார்கள். ஆனால் அதன் கீழேயோ, அவர்கள் அநீதியினதைத் திட்டமிட்டார்கள் - ஏனென்றால் அவர்கள், "அவனை [பவுலை] வழியிலே கொன்று போடும்படி சர்ப்பனை யான யோசனையுள்ளவர்களாய் ..." (வ. 3அ) இருந்தார்கள். மறுபடியும் அதே நிகழ்ச்சி! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சனதெரீன் சங்கத் தலைவர்கள் ரோமச் சேனாதிபதியினிடத் தில், பவுலை அவர்களிடத்தில் கொண்டு வரும்படிக் கேட்டுக் கொண்டிருந்ததுடன், தங்கள் சக சூழ்ச்சிக்காரர்களுடன் இணைந்து, சேவகரை மேற்கொண்டு அந்த அப்போஸ்தலரைக் கொலை செய்யவும் இரகசியமாய்த் திட்டமிட்டிருந்தார்கள் (23:12-15). இவ்வேளையில், ஆயுதமேந்திய மனிதர்கள்[7] யூதேயாவின் மலைத் தேசத்தில் ஒளிந்திருந்து பவுலும் அவரது காவலாளியும்[8] எருசலேமை நெருங்குகையில் அவர்கள் மேல் கைபோட முடியும்.

இருதயமுள்ளவர்கள் தங்கள் கோபத்தைத் தளரவிட்டால் மட்டுமே காலமானது இருதயத்தின் கசப்புணர்வைக் குறைக்க முடியும் (எபே. 4:31ஐக் காணவும்). யூதத் தலைவர்களோ தங்கள் வெறுப்புணர்வை இடைவிடாமல் எரியூட்டி வளர்த் தார்கள், அது முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமாய்க் கொழுந்து விட்டு எரிந்தது (எபி. 12:15)![9]

யூதர்களின் கொலைச் சூழ்ச்சியைப் பெஸ்து அறியாதிருந் திருக்கலாம்,[10] ஆனால் அவர் தமது அதிகார வேலையைச் செய்ய வேண்டும் என்று அறிந்திருந்தார்.[11]

> அதற்குப் பெஸ்து பிரதியுத்தரமாக: பவுலைச் செசரியா விலே காவல் பண்ணியிருக்கிறதே; நானும் சீக்கிரமாக அங்கே போகிறேன். ஆகையால் உங்களில் திறமுள்ளவர்

*கள் கூடவந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்றான் (வ. 4, 5).*

*பெஸ்து, "உங்களுக்குத் தயவு செய்வதற்காக, நான் அந்த வழக்கை மறுபடியும் விசாரிக்கிறேன், ஆனால் நான் தேசாதிபதி என்பதை ஒருபொழுதும் மறந்து விட வேண்டாம். நீங்கள் தான் என்னுடைய திட்டத்திற்கு இசைய வேண்டுமே தவிர, நான் உங்கள் திட்டத்திற்கு இசைவதில்லை" என்று கூறினார்.*

*மீண்டும் ஒருமுறை தேவனுடைய அருளிரக்கம் செயல் படுத்தப்பட்டது (நீதி. 21:1), ஏனெனில் தேசாதிபதி பவுலை எருசலேமுக்குக் கூட்டி வரச் சம்மதித்திருந்தால், அந்த அப்போஸ்தலர் உயிரை இழக்க நேரிட்டிருக்கும். ஜான் வெஸ்லி அவர்கள் குறிப்பிட்டபடி, "எப்படிப்பட்ட காணப் படாத ஊற்றுக்களின் மூலம் தேவன் இவ்வுலகத்தின் மேல் ஆளுகை செய்கின்றார்! பேரரசின் அனுகூலங்களை பாதுகாப்ப தில் பேலிக்ஸின் அக்கறையானது பவுலின் உயிரைக் காப்பதற் குரிய வழியாயிற்று!"[12]*

***அதே வழக்கு (வ. 6, 7)***

*பெஸ்துவின் பதில் அளிப்புக்கு யூதத் தலைவர்கள் தயக்கத்துடன் ஒப்புக் கொண்ட பிறகு, தேசாதிபதி தமது எருசலேம் பயணத்தை விரைவில் முடித்துக் கொண்டார். பிறகு, "அவன் அவர்களிடத்திலே ஏறக்குறையப் பத்து நாள் சஞ்சரித்து, பின்பு செசரியாவுக்குப் போய்" (வ. 6அ), யூதத் தலைவர்களும் அவருடன் பயணம் செய்தார்கள் (வ. 5).*

*யூதர்களுடன் ஒத்துழைக்கத் தமக்கிருந்த விருப்பத்தைக் காட்டுவதற்காகப் பெஸ்து தமது மற்ற காரியங்களை ஒத்திப் போட்டு, "மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து ..." (வ. 6ஆ).[13] அவர் அந்த விஷயத்தைத் திறமையாகவும் தீர்மான மாகவும் முடிவு கட்டத் தீர்மானித்தார். பின்னாளில் அவர், "ஆகையால் அவர்கள் [யூதர்கள்] இங்கே கூடி வந்த போது, நான் எவ்வளவும் தாமதம் பண்ணாமல், மறுநாள் நியாயா சனத்தில் உட்கார்ந்து, அந்த மனுஷனைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன்" (வ. 17) என்று அறிவித்தார்.*

*சேவகர்கள் பவுலைக் கூட்டிச் செல்ல வந்தபோது, அவர்*

*ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும், அதிர்ச்சியடைந்துமிருக்க வேண்டும். அவர் முன்னாள் தேசாதிபதியினால் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு, குற்றமற்றவர் என்று காணப்பட்டிருந்தார் (24:26). இன்னொரு விசாரணை என்பது அவருக்குத் தேவை யில்லாத ஒரு மறுநிகழ்ச்சியாக இருந்தது!*

*பவுல் கொண்டு வரப்பட்ட உடன், பெஸ்து யூதத் தலைவர் கள் தங்களின் வழக்கை முன் வைக்க அனுமதித்தார். இந்த முறை அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மென்மை யான நாவு கொண்ட நியாய சாதுரியன் (24:1) அங்கிருக்க வில்லை. மாறாக, அவர்கள் எல்லாரும், "... அவனை[பவுலை]ச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக் கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன் மேல் சாட்டினார்கள்" (25:7). அந்தக் குற்றச்சாட்டுகள், நியாயாதிபதியாயிருந்த பெஸ்துவுக்குப் புதியவைகளாய் இருந்திருக்கலாம், ஆனால் அவை யாவும் அதிகாரங்கள் 21 மற்றும் 24ல் கூறப்பட்ட அதே களைப் புறுத்தும் குற்றச்சாட்டுகளாகவே இருந்தன (21:28; 24:10-21), அவைகளில் அரசியல் திரிவு[14] என்ற ஒரு சிறு மாறுபாடு மட்டுமே இருந்தது. எப்படியிருப்பினும், குறுக்கு விசாரணை யில் "அவர்களால் நிரூபிக்கப்படக் கூடாத" குற்றச்சாட்டு களாகவே அவை நிலைநின்றன (25:7ஆ; 24:13ஐக் காணவும்).*

*நான் காணுகின்றபடி, அக்காட்சியானது குழப்பமான தாகவும், கூச்சலுடையதாகவும் கூட இருந்தது. வழக்குத் தொடுப்பவர்கள் தங்களின் வழக்கு முன் வைக்கப்படும் வரையிலும் அமர்ந்திருக்க வேண்டும் (வ. 18). ஒவ்வொருவராக வரிசை முறைப்படி பேசுவதே சரியான செயல்முறையாகும். அதற்குப் பதிலாக, எருசலேமிலிருந்து வந்திருந்த தலைவர்கள் யாவரும் பவுலைச் சூழ்ந்து நின்று கொண்டு (வ. 7) தங்கள் வெறுப்புணர்வை அவர் மீதும் பொழிந்தார்கள். அதே வேளையில் செசரியாவில் இருந்து வந்திருந்த உள்ளூர் யூதர்கள் பார்வையாளர்களிடையில் நின்று கொண்டு பவுல் "இனி உயிரோடிருக்கிறது தகாதென்று" (வ. 24) கூக்குரலிட்டார்கள்.*

*இந்த மிகையுணர்வு வெடிப்பினால் எதைச் சாதிக்கலா மென்று யூதர்கள் எதிர்பார்த்திருக்க முடியும்? தங்களின் தவறான மற்றும் இட்டுக் கட்டிய குற்றச்சாட்டுகளால் பவுலை ஒருபோதும் குற்றந் தீர்க்க முடியாது என்று அறிந்திருந்த அந்த யூதர்கள், நாட்டின் சட்ட ஒழுங்கைப் பராமரிப்பதில் அக்கறை*

*யாயிருந்த புதிய தேசாதிபதியைப் பயமுறுத்தலாம் என்று நம்பியிருந்தார்கள் என்பது தெளிவு.*

***அதே முறையீடு (வ. 8)***

*இந்த வேளையில், இவ்வழக்கைத் தீர்த்து வைக்காமல் போனதற்காகப் பேலிக்ஸை பெஸ்து சபித்துக் கொண்டிருந் திருக்க வேண்டும்! யூத மக்களிடத்தில் ரோம நீதியைக் காத்துக் கொள்வதென்பது அவர் யூகித்திருந்தபடி அவ்வளவு எளிதாய் இருக்கவில்லை!*

*ஒழுங்கு நிலையை மீட்டமைத்த பிறகு, தேசாதிபதி, பவுலைப் பேச அனுமதித்தார். பவுலின் தற்காப்பு வாதத்தை லூக்கா ஒரு சில வார்த்தைகளில் சுருக்கிக் கூறினார்: "நான் யூதருடைய வேதப் பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்கா கிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்" (வ. 8).*[15] *சங்கத்தார் மறுபடியும் பாவம், பரிசுத்த இடத்தை அவமதித்தல், மற்றும் கிளர்ச்சி செய்தல் என்ற குற்றச்சாட்டுகளைப் பவுலின் மீது சுமத்தியிருப்பார்கள்: பாவம் - "யூதர்களின் பிரமாணத்தை" மீறியது; பரிசுத்த இடத்தை அவமதித்தல் - "தேவாலயத்தைத்" தீட்டுப்படுத்தியது; மற்றும் கிளர்ச்சி செய்தல் - ரோமாபுரிக்கு எதிராகக் கலகம் செய்தது.*

*இருப்பினும் மூன்றாவது குற்றச்சாட்டுடன் "இராயர்" என்ற புதிய வார்த்தை பயன்படுத்தப்பட்டது. பவுலை யூதேயா வில் விசாரணைகள் செய்த போது இந்தப் பேரரசப் பட்டப் பெயர் இடம் பெறவில்லை, வசனம் 8ல் இவ்வார்த்தை வெறும் தற்செயலாகவே இடம் பெறவில்லை. இந்த அதிகாரத்தில் லூக்காவின் வார்த்தைகள் ரோமப் பேரரசரை ஒன்பது இடங் களில் சித்தரிக்கின்றன: (ஆங்கில மொழியில்)* "Caesar"[16] *என்ற வார்த்தையாக ஆறு முறைகளும் (வ. 8, 10, 11, 12, 21),* "the Emperor" *என்ற வார்த்தையாக இரண்டு முறைகளும் (வ. 21, 25) மற்றும்* "lord"[17] *என்ற வார்த்தையாக ஒரு முறையும் (வ. 26) சித்தரிக்கப்படுகின்றன. பலஸ்தீனத்திலிருந்து ரோமாபுரிக்கு, கீழ்ப்பட்டவர்களிடமிருந்து மேல் நிலையில் உள்ள மனிதரிடத் திற்கு கவனம் திரும்பிக் கொண்டிருந்தது (27:24ஐக் காணவும்)!*

*மூன்று குற்றச்சாட்டுகளிலும் தாம் "குற்றமற்றவர்" என்று பவுல் முறையீடு செய்ததுடன், மரித்தோர் உயிர்த்தெழுவதைத்*

*தாம் நம்புவதாலேயே "குற்றவாளி" என்றெண்ணப்படுவ தாகவும் முறையிட்டு (24:20, 21ஐக் காணவும்), இயேசு உயிரோடிருக்கிறார் என்று தைரியமாய் அறிக்கையிட்டார் (25:19)!*

***அதே அரசியல் (வ. 9)***

*பவுல் முடித்த பொழுது, பெஸ்து திகைப்படைந்து குழப்பமுற்றார் (வ. 20). பெஸ்து பேலிக்ஸைப் போல "இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த"தில்லை (24:22அ). பின்னாளில் இதைப் பற்றி மறுபடியும் அவர் கூறுகையில், இரு சாராரின் கூற்றுக்களுமே தமக்கு மதியற்ற கூற்றுகளாக ஒலித்ததாகக் கண்டார்:*

> *அப்பொழுது குற்றஞ்சாட்டினவர்கள் வந்து நின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல், தங்களுடைய மார்க்கத்தைக் குறித்தும், மரித்துப் போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக் கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்தும் சில தர்க்க விஷயங்களை அவன் பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள் (25:18, 19).*

*தேசாதிபதிக்கு இரு உண்மைகள் பளிங்கு போலத் தெளி வாய்த் தெரிந்தன: முதலாவதாக, இவ்விஷயம் மார்க்கரீதி யானதே தவிர, அரசியல் ரீதியானதல்ல. (கல்லியோன் இம்முடிவுக்கு வந்திருந்த போது, நியாயாசனத்திலிருந்து அந்த வழக்கைத் தூக்கியெறிந்திருந்தார் [18:14-16], பெஸ்துவும் இதே செயலைத்தான் செய்திருக்க வேண்டும்). இரண்டாவதாக, பவுல் ஒரு குற்றவாளியல்ல. (பின்னாளில் தேசாதிபதி, "இவன் மரணத்துக்குப் பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை யென்றும் நான் அறிந்து கொண்டதினாலும்" [25:25அ] என்று ஒப்புக் கொண்டார்.) இந்த இரு உண்மைகளும் விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். பெஸ்து தமது நியாயாசனத்தில் இருந்து, "பிரதிவாதி எனப்படுபவர் 'குற்ற வாளியல்ல' என்று நான் காணுகின்றேன்" என்று அறிவித்திருக்க வேண்டும் - ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.*

*தேசாதிபதி இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் இருந்தார்: அவர் ரோமாபுரியின் மீது கொண்ட பயத்தினால்,*

பவுலைக் குற்றவாளி என்று கூறத் துணியவில்லை, அவர் யூதர்கள் மீது கொண்ட பயத்தினால், பவுலைக் குற்றமற்றவர் என்று கூறத் துணியவில்லை. தமது புதிய பதவியில் அவர் பொறுப்பேற்ற இரு வாரங்களுக்கும் குறைவான நாட்களில் அவருடைய மேன்மையான கொள்கைகள் யாவும் நசுக்கப் பட்டிருந்தன. அவருக்கு முன்னும் பின்னும் இருந்த மற்ற அரசியல்வாதிகளைப் போலவே அவரும் அரசியல் ரீதியாகச் சாதகமானது எது என்று அக்கறைப்படுவதில் முடித்தார்.

பெஸ்து தமது நிர்வாகத்தைக் கட்டியெழுப்பவும் அல்லது உடைத்தெறியவும் வல்லமை கொண்ட கல்லான முகங் கொண்ட யூதத் தலைவர்களால் சூழப்பட்டிருக்கும்போது தமது விருப்பத் தேர்வுகளைக் கவனித்துப் பார்த்தார். அவருடைய சிந்தனைச் செயல் முறையைக் கற்பனை செய்வது கடினமல்ல: "இந்த மகிழ்ச்சியின்மைக்கு மையமாய் இருப்பது யூத மார்க்கத்தின் ஒரு கேள்வியேயாகும், எனவே இதைத் தீர்த்து வைப்பதற்கு எருசலேமே சிறந்த இடமாயிருக்கும், ஏனெனில் அவ்விடம்தான் யூதமார்க்கத்தின் மையமாகும். அது சங்க உறுப்பினர்களையும் சந்தோஷப்படுத்தும். மறுபுறத்தில் இந்தச் செயலானது இக்கைதியைக் கோபப்படுத்தக்கூடும். எனவே அவனை விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்."

பெஸ்து, பவுலின் பக்கம் திரும்பினார்: "நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக் குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா?" (வ. 9ஆ). "எனக்கு முன்பாக" என்ற வார்த்தைகள் பவுலுக்கு ஆதரவான தயவு செய்தல் போல ஒலித்தாலும் சட்ட விரோத மானதாக, தர்க்கப் பொருத்தமற்றதாக, தீய ஆலோசனையாக இருந்தது: பவுல் ஏற்கனவே இரண்டு தரம் குற்றமற்றவரென்று அறியப்பட்டிருந்ததால் அது சட்ட விரோதமானது. முந்திய இரு விசாரணைகளிலும் முடிவொன்று அடையப்படாதிருந் ததால், மூன்றாவது விசாரணை மாறுபட்ட ஒரு விளைவை உண்டாக்க வேண்டியது ஏன்? என்பதால் அது தர்க்கப் பொருத்தமற்றது. கடைசியாக, பவுலின் கண்ணோட்டத் திலிருந்து பார்க்கையில், அந்தத் திட்டமான தீய ஆலோசனை யின் பேரில் தீர்மானிக்கப்பட்டதாயிருந்தது. யூதர்களின் ஒரு சிறு கூட்டத்தாரால் பேலிக்ஸ் பயமுறுத்தப்பட்டிருக்க

*முடிந்தது என்றால், பவுலின் மரணத்தை வற்புறுத்திய ஆயிரக் கணக்கானவர்கள் குழுமியிருக்கையில் அவர் இன்னும் அதிகமாய்ப் பயமுறுத்தப்படக் கூடுமே. மற்றும், யூதர்கள் எவ்வளவு மூர்க்கத்தனம் நிறைந்தவர்கள் என்று யாருக்குத் தெரியும்? பவுல் அடிக்கடி அவர்களின் சூழ்ச்சியினால் உபத்திரவப்பட நேர்ந்திருந்ததே (9:24; 20:3; 23:14) இப்பொழுது அவர்களை நம்புவது எப்படி?*

*பெஸ்து "யூதருக்குத் தயவு செய்ய மனதாய்" (வ. 9அ) இருந்ததால் இந்த ஏற்பாட்டைக் கூறினார் என்று லூக்கா குறிப்பிட்டார். இவ்விடத்தில் நாம் இன்னொரு முறை அதே நிகழ்ச்சியைக் காணுகின்றோம்: மீண்டுமொருமுறை, பலவீன மான ஒரு அதிகாரவர்க்கத்தார் பவுலை அரசியல் பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தார்.*

*பெஸ்து பவுலிடத்தில் "எருசலேமுக்குச் செல்லச் சம்மதியா" (வ. 9ஆ) என்று கேட்ட உண்மையைக் கொண்டு தவறான எண்ணங் கொண்டு விட வேண்டாம். "ஒரு தேசாதிபதியின் விசாரணை என்பது அவரது முடிவுக்கு ஒப்பனை செய்வதா கவே இருந்தது."[18] தேசாதிபதி பவுலுக்கு, தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு ஒன்றைத் தரவில்லை. அந்த அப்போஸ்தலர் எருசலேமுக்குப் போவார் என்பதையே அவர் அவரிடத்தில் (பவுலிடத்தில்) கூறிக் கொண்டிருந்தார்.[19]*

## *இல்லை - ஒரு நினைவூட்டுதல்! (25:10-12)*

*நாம் படிக்கும் வரலாறு இந்த இடத்தில் ஒரு முழு திருப்பத்தை மேற்கொள்ளுகின்றது. இந்த நிகழ்ச்சி மறுபடியும் நிகழ்வதற்குப் பதில், ஒரு நினைவூட்டுதலாகின்றது, தேவன் எப்பொழுதுமே "தப்பிக்கொள்ளும்படியான போக்கை" அருளுகின்றார் என்பதற்கான மறு உறுதிப்பாடு ஆகின்றது (1 கொரி. 10:13).*

### தேவன் பவுலைப் பாதுகாத்தார்

*பலஸ்தீனத்தில் இருந்த மிக அதிக வல்லமை நிறைந்த மனிதரைப் பவுல் எதிர் கொண்டார், பவுலின் வாழ்க்கை*

அந்தரத்தில் ஊசலாடியது (யோவா. 19:10ஐக் காணவும்) - அவர் "முடியாது" என்று கூறினார்:

> அதற்குப் பவுல்: நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன்; அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்பட வேண்டியது; யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக் கிறீர். நான் அநியாயஞ் செய்து, மரணத்துக்குப் பாத்திர மானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாத படிக்கு மனுக் கேட்க மாட்டேன். இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவு பண்ணும் பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக் கொடுக்கலாகாது. இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான் (வ. 10, 11).

ரோம தேசாதிபதி ஒருவருக்கும், ரோமக்குடிமகன் ஒருவருக்கும் இடையேயான ஒரு அதிகாரப் போராட்டத் தைப் பற்றி நமது வேதபாடப் பகுதி கூறுகின்றது - தேவனு டைய உதவியுடன், அந்தக் குடிமகன் வெற்றி பெற்றார். பவுலின் வார்த்தைகள் ஜீவனுள்ள வேதாகமத்தில் (The Living Bible) பின்வருமாறு பொழிப்புரைக்கப்பட்டுள்ளன:

> இல்லை! பேரரசர் முன்பாக விசாரணைக்குட்படும் எனது உரிமையை நான் வேண்டுகிறேன். நான் குற்றவாளியல்ல என்று நீர் நன்றாயறிவீர். நான் மரணத்திற்கேதுவான எதையாவது செய்திருந்தால், மரிப்பதற்கு நான் மறுக்க மாட்டேன்! ஆனால் நான் ஒன்றுமறியாதவனாக இருக்கும்பொழுது, என்னைக் கொலை செய்யும்படி இந்த மனிதர்களிடத்தில் ஒப்புவிப்பதற்கு உங்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ, உரிமையில்லை. நான் செசாருக்கு அபயமிடுகின்றேன்.

ரோமக்குடிமகன் ஒருவர், தமது வழக்கு தவறாகக் கையாளப் படுகிறதென்று நம்பினால், அவர் செசாரிடத்தில் முறையீடு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தார். இந்த உரிமைக்கு (கொலைகாரார்கள் அல்லது கொள்ளைக்காரர்கள் கையும் களவுமாகப் பிடிபடுதல் போன்ற) சில விதிவிலக்கு களும் இருந்தன, ஆனால் இது ரோமக்குடிமகனின் அடிப்படை

*உரிமையாய் இருந்தது.[20] ஒரு குடிமகன் "Caesarem appello"[21] என்று கூறிய பொழுது அவரது விஷயமானது அவருடைய நீதிபதியின் கையிலிருந்து எடுக்கப்பட்டதாயிருந்தது.*

*பவுல் அபயமிட்ட வேளையில் நீரோ என்பவர் இராயராக (செசாராக) இருந்தார். இவர் கி.பி. 54ல் அரியணை ஏறியிருந்தார். நீரோவின் இரத்தக் கறை படிந்த வரலாற்றை அறிந்துள்ள நாம், அவருடைய கரங்களில் பவுல் தம்மை ஒப்புவிக்க விருப்பம் கொண்டார் என்பதை வினோதமானதாக எண்ணலாம். இருப்பினும், நீரோவின் ஆட்சியில் (அவர் செனகா[22] மற்றும் சிலருடைய செல்வாக்கின் கீழ் இருந்த) முதல் ஐந்தாண்டு காலமானது ரோமாபுரியாரின் "பொற்காலம்" என்று கருதப்பட்டது என்பதை நினைவில் வையுங்கள். "கி.பி. 64 மற்றும் 65ன் நிகழ்ச்சிகள் பற்றி எச்சரிக்கை கி.பி. 59ல் மிகச் சிறிதளவே இருந்தது."[23]*

*பெஸ்து நிச்சயமாகவே அதிர்ச்சியடைந்திருப்பார். ரோமக்குடிமகன் ஒவ்வொருவருமே ரோமாபுரிக்கு முறையீடு செய்ய உரிமை பெற்றிருந்தாலும், சங்கடம் மற்றும் வசதிக் குறைவு ஆகிய காரணங்களால், ஒரு சிலர் மட்டுமே அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆயுதமேந்திய காவலனுடன் தலைநகருக்குள் நுழைவது என்பது எந்த ஒரு மனிதருக்கும் விருப்பமாயிருந்ததில்லை. மேலும், சராசரி மனிதர் ஒருவர் அங்கு பயணம் செய்யவும், தன் வழக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாள் வரையிலும் ரோமாபுரியில் காத்திருக்கவும் நேரம் ஒதுக்குவது என்பது முடியாத செயலாகும் (28:30ஐக் காணவும்).*

*கலக்கமடைந்த பெஸ்து, என்ன செய்வதென்று காண்பதற்கு, "... தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து" (25:12அ). சந்தேகமின்றி அவர்கள் அவரிடத்தில், பவுல் முழுமையாகத் தமது உரிமைகளுக்குள் நிலைநின்றிருந்தார் என்றும் - ரோமப் பிரதிநிதி என்ற வகையில் தேசாதிபதிக்கு வேறு தெரிவு எதுவும் இல்லையென்றும் கூறினார்கள். பெஸ்து சிவந்த முகத்துடன் தமது நியாயாசனத்திற்குத் திரும்பி வந்து, அந்தப் பழைமையான விதிமுறையை அறிவித்தார்: Caesarem appellesti; ad Caesarem ibis: "நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக் கடவாய்" (வ. 12ஆ).*

*பெஸ்து இவ்வார்த்தைகளைப் பேசுகையில், தமது உணர்வுகளையும் அதில் கலந்திருக்கலாம். "ஒன்றுமற்ற" ஒருவரிடம்*

*இருந்து எதிர்பாராது வந்த முயற்சித் தடையினால் அவர் வேதனையடைந்திருக்கலாம். அந்தச் செயல்பாடு தமது நிர்வாகத்தைப் பாதிக்காதபடி அதை எப்படிக் கையாளுவது என்பது பற்றி நிச்சயமாக அவர் படபடப்புடன் இருந்திருப் பார். தொல்லை தரும் இம்மனிதரும், பாரம் மிகுந்த இந்த வழக்கும் விரைவிலேயே அவரது பொறுப்பிலிருந்து அகன்று போவது பற்றி அவர் நிம்மதியடைந்தும் இருப்பார்!*

*தேசாதிபதி, ''அவனை [பவுலை] இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல் பண்ணும்படி'' (வ. 21) கட்டளை யிட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு, பவுல் ரோமாபுரிக்கான தமது பயண வழியில் இருந்தார்!*

*பவுலின் முறையீட்டைக் கவனிக்கையில் பல கேள்விகள் நமது சிந்தையில் வருகின்றன: பவுல், இராயருக்கு அபயமிடும் தம் உரிமையை அறிந்திருந்தும், அந்த உரிமையை அவர் முன்னரே பயன்படுத்தாதது ஏன்? (இவ்விதமாய் இரண்டு ஆண்டுகள் செசரியாவில் சிறைப்பட்டிருந்ததைத் தவிர்த்திருக் கலாமே.) கடைசியில் அவர் தமது உரிமையை வலியுறுத்தியது ஏன்?*

*எருசலேமுக்குத் திரும்பச் செல்லுவது பற்றி பெஸ்து பேசிய நேரம் வரைக்கும், பவுல் தாம் ரோமாபுரிக்குச் செல்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விருப்பத் தேர்வுகள் பெற்றிருந்ததாக நினைத்தார். இராயருக்கு அபயமிடுதல் என்பது அவருக்கு முன்னால் அப்படியிருந்த ஒரு திறந்த கதவு ஆகும், ஆனால் அது மிகக்குறைந்த அளவே விரும்பத்தக்க கதவாய் இருந்தது.[24] பவுல் ரோமாபுரிக்கு ஒரு கைதியாகச் செல்வதை விரும்பவில்லை;[25] மாறாக அவர் ஒரு சுதந்திர மனிதராக - அவர் விரும்பும் இடத்திற்குச் சுதந்திரமாகச் செல்லவும், அவர் விரும்புமிடத்தில் சுதந்திரமாகப் பிரசங்கிக்கிறவராகச் செல்லவும் - விரும்பினார்.[26] பேலிக்ஸ் பாதுகாப்பின் கீழ் சிறைப்பட்டிருந்த இரு ஆண்டு களில், பவுல் தாம் எந்த நேரத்திலும் விடுதலை செய்யப்படக் கூடும் என்று நம்பியிருந்தார். பவுலை விடுதலை செய்யாமல் பேலிக்ஸ் நாட்டை விட்டுச் சென்றபோது, அவரது முகத்தின் முன்பாக ஒரு கதவு மூடியது.[27]*

*தேசாதிபத்தியப் பொறுப்பானது பெஸ்துவுக்கு - யூதர்களின் தந்திரங்களைப் பற்றிய புரிந்து கொள்ளுதலோ அல்லது கிறிஸ்தவத்தைப் பற்றிய நன்மதிப்போ இல்லாத அந்த*

*மனிதருக்கு - கொடுக்கப்பட்ட பொழுது, இன்னொரு கதவு அறைந்து மூடத் தொடங்கியது. கடைசியில் பவுல் எருசலேமுக்குக் கூட்டிக் கொண்டு போகப்படுவார் என்று தேசாதிபதி தகவல் கொடுத்த பொழுது, இராயருக்கு அபயமிடுவது என்ற ஒரே ஒரு கதவு தான் திறந்திருந்தது. அந்தக் கதவும் மூடுவதற்கு முன்பு பவுல் அதன் வழியே விரைந்தோடினார்.*

*இராயருக்கு அபயமிட்ட போது பவுல் தவறானதைச் செய்தாரா? அகிரிப்பா இராஜா பிற்பாடு பெஸ்துவிடம், "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும்" (26:32ஆ) என்று கூறவில்லையா? ஆம், அகிரிப்பா இராஜா இதைக் கூறினார், ஆனால் மிகவும் தாமதமாகக் கூறினார் (25:13, 14).[28] பவுல் தமது முறையீட்டினால் தேசாதிபதியின் திட்டங்களைத் தடை செய்யாதிருந்திருந்தால், அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் செசரியாவுக்கு வந்து சேரும் முன்னதாகவே பவுலின் மரண இரங்கல் செய்தியை லூக்கா வாசிக்க நேரிட்டிருக்கும்.[29]*

*தேவனுடைய பராமரிப்பின் கரத்தை மீண்டும் ஒருமுறை காண முடியும்: இராயருக்கு அபயமிட்டதினால், பவுல் அகிரிப்பா இராஜாவுக்குப் பிரசங்கிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் (9:15; 26:1). இராயருக்கு அபயமிட்டதினால், பவுல் நாட்டை விட்டு வெளியேறும் வரையிலும் ரோமப் பாதுகாப்பைப் பெற்றிருந்தார் (25:21ஐக் காணவும்). இராயருக்கு அபயமிட்டதினால், பின்னாளில் இராயருடைய அரண்மனையில் சுவிசேஷத்தின் செல்வாக்கைப் பவுலினால் விரிவாக்க முடிந்திருந்தது (அப். 9:15; பிலி. 4:22). ரோமாபுரிக்கு அபயமிட்டதினால், பவுல் நீரோவுக்குக் கூட பிரசங்கிக்கும் வாய்ப்பைப் பெற்றார் (அப். 27:24). பேரரசின் நீதிமன்றத்தில் பவுல் வழக்கை முன் வைத்து, கிறிஸ்தவத்தைச் சட்டப்பூர்வமாக்குவதற்காக, தேவனே, பவுலை இராயருக்கு அபயமிடும்படி "கட்டாயப்படுத்தி" யிருக்கவும் (28:19) சாத்தியமுண்டு.*

### தேவன் நம்மைப் பாதுகாக்கின்றார்

*இந்த வரலாற்றில் பல பாடங்கள் நமக்கு உண்டு, ஆனால் தேவன் தமது பரிசுத்தவான்களை அற்புதமான வழியில் பாதுகாக்கின்றார் என்ற பாடத்தையே நான் வலியுறுத்த விரும்புகின்றேன். முன்பே நான் 1 கொரிந்தியர் 10:13ஐக்*

குறிப்பிட்டேன். அந்த வசனம் முழுமையும் பின்வருமாறு:

> மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை; தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.[30]

பவுல் இவ்வசனத்தில் சோதனைகளை - துன்பங்களை - ப் பற்றி அதிகம் கூறியுள்ளார்: இடர்ப்பாடு என்பது ஒவ்வொரு வருக்கும் வருகின்றது; ஒருவரும் அதற்கு விதிவிலக்கல்ல. நாம் பெறுகின்ற இடர்பாடுகள் இணையற்றவையல்ல; கடந்த காலத்தில் இதே பிரச்சனைகளை மற்றவர்கள் பெற்றிருந் தார்கள். மிக முக்கியமாக, சோதனைகள் ஏற்படும் போது, தேவன் கட்டுப்படுத்துகின்றார் என்று கிறிஸ்தவர்கள் நம்பிக்கையாய் இருக்க முடியும்! இதற்கான ஆதாரத்தை நாம் நமது பாடங்களில் மறுபடியும் மறுபடியும் கண்டிருக்கின் றோம்; பவுலின் மீது தேவன் கொண்டிருந்த அருளிரக்கம் நிறைந்த அக்கறையானது மறுக்கப்பட முடியாதது ஆகும். "விசுவாசத்தினால் தேவனுடைய திட்டங்களில் தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்ளுகிறவர்கள் மத்தியில் ... தேவன் தம்முடைய மாபெரும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ... சிறைச்சாலைக் கட்டுகள், பேராசை, தீய அரசியல் இயக்கங்கள் மற்றும் வெறுப்புணர்வு ஆகியவற்றைக்கூடப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்"[31] என்பதை நாம் கண்டிருக்கின்றோம்.

சோதனைகளைக் குறித்துப் பவுல் 1 கொரிந்தியர் 10:13ல் இரண்டு வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார்: முதலாவது, தேவன் சோதனைகளை அனுமதிப்பதுடன், அவைகளை மட்டுப்படுத்தவும் செய்கின்றார்:[32] "தேவன் உண்மையுள்ள வராயிருக்கிறார், உங்களால் தாங்க முடிந்த அளவுக்கு அப்பால் நீங்கள் சோதிக்கப்படும்படி [அல்லது உபத்திரவப்படுத்தும் படும்படி] அவர் அனுமதிப்பதில்லை" (New Century Version).

ஒரு கிறிஸ்தவர் தமது பாவத்திற்குச் சாக்குப் போக்குச் சொல்ல முயற்சித்து "இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று" என்று கூற நீங்கள் எப்பொழுதாவது

கேட்டதுண்டோ? இப்படிப்பட்ட கூற்றானது தேவனுடைய உண்மையை மிகவும் வறியதாகப் பிரதிபலிக்கின்றது! "ஒன்றும் செய்ய இயலாமல் போயிற்று" என்று அந்தத் தனி நபர் தமது இயலாமையைக் குறிப்பிட்டால், தேவன் அம்மனிதரின் சக்திக்கு மேலாக சோதனைகளை அனுமதித்தார் என்று ஆகின்றது - தேவன் உண்மையற்றவர் அல்லவே! "ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று" என்றால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது என்று ஆகாமல், நாம் ஒன்றும் செய்ய விரும்பவில்லை என்றே ஆகின்றது! நம்மில் பெரும் பாலோர் ஒருபொழுதும் பெற்றிராத அளவுக்குப் பவுல் உபத்தி ரவங்கள் பலவற்றைப் பெற்றிருந்தார், ஆனால் அவர் "கர்த்தரே, நீர் என்னால் தாங்க முடியாத அளவு அதிகம் சோதனைகளைக் கொடுத்து விட்டீரே!" என்று முறையிட வில்லை.

இரண்டாவது வாக்குத்தத்தமானது அதிகாரம் 25ல் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது: நமது பிரச்சனைகளில் தேவன் வரையறை ஒன்றை வைத்து மட்டுப்படுத்துவதுடன், அவைகளை மேற்கொண்டு வெற்றி பெறும் வழிகளையும் நமக்குக் கொடுக்கின்றார்: "சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." "தப்பிக்கொள்ளும்படியான போக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் "வெளியேறும் வழி" என்பதே நேரடியான அர்த்தமாகும். முதல் நூற்றாண்டின் படை வீரர்கள் மத்தியில் (தோல்வியென்பது தவிர்க்கமுடியாத நிலையில்), சூழப்பட்டி ருக்கையில், அவர்கள் தப்பிச் செல்லக் கூடிய வகையில் எதிரிப்படை நடுவில் திடீரென்று ஏற்படும் ஒரு இடைவெளி திறப்பைக் குறிப்பதற்கு இச்சொற்றொடர் பயன்படுத்தப் பட்டது!

"தப்பிக் கொள்ளும்படியான போக்கு" என்பது மூன்று காரணிகளைச் சார்ந்ததாகும்: ஒன்று அந்த இடர்ப்பாட்டின் இயல்பு ஆகும். தப்பும் வழிகள் என்பது நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுடன் தொடர்புடையதாகும். எருசலேமில் கொலைத் திட்டத்திலிருந்து பவுல் "தப்பிக் கொள்ளும்படியான போக்காக" இருந்தது எதுவென்றால், அச்சூழ்ச்சியைப் பற்றிச் சேனாதிபதியிடம் அறிவித்தல் ஆகும். எருசலேமுக்கு மறுபடி யும் கூட்டிச் செல்லப்படுவதிலிருந்து "தப்பிக் கொள்ளும்

படியான போக்காக" அவர் இராயருக்கு அபயமிட்டார். இரண்டாவது, இடர்ப்பாட்டைப் பெறுகிறவர்களின் தாங்கும் தன்மையை தேவன் அறிந்திருக்கின்றார். பிரச்சனைகளையும் தீர்வுகளையும் நமக்குப் பொருந்தும் வகையில் அவர் இணைக் கின்றார்.[33] பவுலுடைய "தப்பிக் கொள்ளும்படியான போக்கு" என்பது எனக்கு திறந்திராமல் இருக்கக் கூடும்; அவர் ஒரு ரோமக் குடிமகனாய் இருந்தார், நான் அப்படியில்லையே. மூன்றாவது, "தப்பிக் கொள்ளும்படியான போக்கு" என்பது இடர்ப்பாட்டில் இருப்பவர்களைப்பற்றி தேவன் கொண்டுள்ள திட்டங்கள் மற்றும் நோக்கங்களைச் சார்ந்தது ஆகும். KJVயில் "*a* way to escape" என்றுள்ளது, ஆனால் NASBயில் "*the* way of escape" என்று மிகச் சரியாக உள்ளது - வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் இந்தப் போக்கானது தேவனுடைய திட்டத்திற்கு முரண்பாடற்றதாயுள்ளது.

இடர்ப்பாடு வெள்ளமெனப் பெருக்கெடுக்கும்போது நாம் தேவனுடைய "தப்பிக் கொள்ளும்படியான போக்கு" எது என்று உணராதிருக்கலாம். பெரும்பாலும் இந்தப் போக்கு என்பது நம்மால் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ, நாம் விரும்பு வதாகவோ இருப்பதில்லை. செசரியாவில் பவுலுக்கு தேவனு டைய "தப்பிக் கொள்ளும் போக்கு" என்பது அவர் (பவுல்) விரும்பியதாயிருக்கவில்லை; ரோமாபுரிக்கு அவர் கைதியாக அல்ல சுதந்திரமான மனிதராகவே செல்ல விரும்பினார். எப்படியிருந்தாலும், இராயனுக்கு அபயமிடுதல் என்பது பவுலின் முதலாவது தெரிவாக இருந்தாலும் இல்லா விட்டாலும் அதுவே தேவனுடைய "தப்பிக் கொள்ளும் படியான போக்காக" இருந்தது. அது போலவே, நாம் சோதனைகளினால் பாரப்படும்போது, அந்த சோதனைகளை நீக்குவதில் ஈடுபடும் தேவனுடைய "தப்பிக் கொள்ளும் படியான போக்கையே" தெரிவு செய்து கொள்ள வேண்டும். இருப்பினும் தேவன் நம்மைச் சிறந்த மக்களாக்குவதற்காக அந்த சோதனைகளை அனுமதித்திருக்கலாம் (யாக். 1:2-4). அப்படிப்பட்ட நிலையில், அவருடைய "தப்பிக் கொள்ளும் படியான போக்கு" என்பது நாம் நம்முடைய பிரச்சனை களுடன் வாழக் கற்றுக் கொள்ளுவதையும், நமது பலத்திற்காக அவரை அதிகமாய் நம்பியிருப்பதையும் அடக்கியுள்ள தாயிருக்கும்!

*இரண்டு சத்தியங்களை உங்கள் சிந்தையில் செதுக்கிக் கொள்ளுங்கள்; அதன் பிறகு, உங்கள் வழியில் உபத்திரவம் வரும் பொழுது நீங்கள் தயாராக இருப்பீர்கள்: (1) தப்பிக் கொள்ளும்படியான போக்கு எப்பொழுதுமே - நாம் அதற்காகத் தேடினால் மட்டுமே - கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றது. அது அப்படியே ஆகுமென்று தேவன் வாக்குத் தத்தம் செய்திருக்கின்றார்! அவர் பவுலைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டார்; அவர் நம்மைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வார்! (2) வெற்றி என்பது எப்பொழுதுமே - நாம் அதை உரிமைகோரினால் மட்டுமே - சாத்தியமானதாய் இருக்கின்றது. திறந்த கதவின் மூலம் செல்லுவதற்குத் தேவன் நம்மை கட்டாயப்படுத்துவதில்லை. அதன் அனுகூலத்தைப் பயன் படுத்திக் கொள்ளுவது நம்மைப் பொறுத்ததாக உள்ளது. தேவனுடைய சித்தத்திற்குத் தாழ்மையுடன் நம்மை ஒப்புக் கொடுப்பதன் மூலம் தேவனை நமது வாழ்வில் செயல்பட நாம் அனுமதித்தால், சோதனைகள் ஒருபொழுதும் நம்மை வெல்ல முடியாது!*

## *முடிவுரை*

*பேலிக்ஸ் மற்றும் பெஸ்துவின் வரலாறுகளில் உள்ள கடைசியான ஒரு வேறுபாட்டை நாம் காண்போம். பவுல் பேலிக்ஸுக்குப் பிரசங்கித்த போது, அவர் (பேலிக்ஸ்) "பயமடைந்து, நடுங்கினார்" (24:25;* NASB, KJV*) பவுல் பெஸ்துவுக்குப் பிரசங்கித்த போது, அந்தத் தேசாதிபதி "இழக்கப்பட்ட நிலையில்" (25:20) இருந்து, முழு விஷயமுமே "நகைக்கத் தக்கது" (25:27) என்று நினைத்தார். பின்னாளில் அவர், "பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" (26:24ஆ) என்று கூறினார்.*

*பேலிக்ஸின் வரலாறானது, தொடப்படக்கூடிய இருதயம் இருந்தும் தேவனிடத்தில் திரும்புவதற்கு மனவலிமையற்ற மனிதரின் பரிதாப நிலையை விளக்குகின்றது. பெஸ்துவின் வரலாறானது, தொடப்படவே முடியாத இருதயம் கொண்ட மனிதரின் பரிதாப நிலையை விளக்குகின்றது. அக்கிரமம், அறியாமை மற்றும் மாறுபாடு ஆகியவற்றால் உணர்ச்சியற்றுப் போன இருதயமானது சுவிசேஷப் பிரசங்கத்தைப் பைத்தியக்*

காரனின் ஆத்திரப் பேச்சு என்று நினைக்கின்றது (எபி. 4:19; எபி. 3:13; 1 கொரி. 2:14).

நீங்கள் பேலிக்ஸைப் போலவோ அல்லது பெஸ்துவைப் போலவோ இருக்கக் கூடாதென்று நான் ஜெபிக்கின்றேன். உங்கள் இருதயம் இன்னும் மென்மையாய் இருக்கின்றதா? நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று உணரும் பொழுது, தயக்கமின்றி பதில்செயல் செய்வீர்களா? உங்களின் நித்திய அடைவிடமானது அதன் மீதே சார்ந்துள்ளது!

## பிரசங்கக் குறிப்புகள்

அதிகாரம் 25ல் இருந்து நீங்கள் ஒரே ஒரு பிரசங்கம் பிரசங்கிக்க விரும்பினால், Wiersbe's Expository Outlines on the New Testament என்ற நூலானது மூன்று முக்கிய கருத்துக்களை ஆலோசனையாகத் தருகின்றது. (1) பவுல் இராயருக்கு அபயமிடுதல் (வ. 1-12); (2) பவுல் பெஸ்துவை கலங்கச் செய்தல் (வ. 13-22); (3) பவுல் ராஜரீகத்தை எதிர்கொள்ளுதல் (வ. 23-27).

அதிகாரம் 25 மற்றும் 26 ஆகியவற்றை நீங்கள் ஒரே பிரசங்கத்தில் விளக்கி முடிப்பதைத் தேர்ந்து கொண்டால், வயர்ஸ்ப் அவர்கள் "தற்காப்புவாதி பவுல்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் தயாரித்துள்ளார். அதன் மூன்று பிரிவுகள் பின்வருமாறு: (1) Conciliation - இணைக்கப்படுதல்: பெஸ்துவும் யூதத் தலைவர்களும் (25:1-12); (2) Consultation - கலந்து ஆலோசித்தல்: பெஸ்துவும் அகிரிப்பாவும் (25:13-27); (3) Confrontation - எதிர்த்து நிற்றல்: பெஸ்துவும் அகிரிப்பாவும் மற்றும் பவுலும் (26:1-32).

---

குறிப்புகள்

[1]வேதாகமம் இதற்குத் தெளிவான விதிவிலக்காயிருக்கின்றது, இதை நாம் முழுமையாகப் புரிந்து கொண்டு பாராட்டுவதற்கு நாம் மறுபடியும் மறுபடியும் படிக்க வேண்டும். [2]"வெள்ளையடிக்கப்பட்ட அந்தச் சுவர்" பணியிலிருந்து "தேவனால் அடிக்கப்பட்டார்." இருப்பினும், அவர் அப்பொழுதும் கூட "பிரதான ஆசாரியர்களின்" நடுவில் கணிசமான செல்வாக்கைப் பெற்றிருந்தார். பின்னாளில் அவர் மரிக்கும்படி அடிக்கப்பட்டார் (அப். 23:2, 3க்கான குறிப்புகளை இந்த இதழில்

காணவும்). [3]இஸ்மவேல் என்று நடபடிகளில் பெயர் குறிப்பிடப்பட வில்லை; இந்தத் தகவலானது வரலாற்றாளரான யோசிப்பஸிடம் இருந்து வருகின்றது. [4]"விரோதமாகத் தீர்ப்பு" என்ற சொற்றொடரானது "குற்றத் தீர்ப்பு" என்பதைக் குறிப்பிடும் கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [5]நடந்தது என்ன என்பதைக் கூறுகையில் பெஸ்து தம்மை முடிந்த அளவு நல்லவரென்று காட்டிக் கொண்டார் என்பதை நான் உணருகின்றேன், ஆனால் பெஸ்துவை நம்பும்படி இணங்குவதற்கு என்னிடம் இரண்டு காரணங்கள் உள்ளன: (1) தேசாதிபதியின் வார்த்தைகள் லூக்காவின் மூல விபரங்களுக்கு முரண்பட வில்லை; மாறாக அவை அந்த விபரங்களுக்குக் கூடுதல் தகவல் தருகின்றன. (2) யூதத் தலைவர்களின் வேண்டுகோளானது அவர்கள் பவுலின் மீது கொண்டிருந்த வெறுப்புணர்வை அறிந்த நிலையில் பெஸ்துவால் முரண்பாடின்றி அறிக்கை செய்யப்பட்டது. [6]புதிய அலுவலர் மீது போடப்பட்ட வலியுறுத்தலானது நம்ப இயலாத அளவு அதிகமாயிருந்தது! அவர்கள் பெஸ்துவுக்கு இலஞ்சம் தரக் கூட முயற்சித்திருக்கலாம் என்றொரு கருத்து நிலவுகின்றது. பெஸ்துவுக்கு முன் அப்பதவியில் இருந்தவர்களை விலைக்கு வாங்க முடிந்திருந்ததால் (24:26), அவரையும் விலைக்கு வாங்க முடியும் என்று அவர்கள் கற்பனை செய்து கொண்டிருக்கலாம். [7]இவர்களில் சிலரோ அல்லது எல்லாருமோ இதற்கு முன் பவுலைக் கொலை செய்யும்படியான சபதத்தில் தங்களை உட்படுத்திக் கொண்டவர்களாய் இருந்திருக்கலாம் (23:12, 13). [8]கிலவுதியு லீசியா செய்தது போன்று பெரும்படையொன்றைக் காவலுக்குப் பெஸ்து தந்திராமல் இருந்திருக்கக் கூடும் (23:23). [9]அதிகாரம் 23ல் சூழ்ச்சித் திட்டமானது நாற்பது பேருடன் தொடங்கியது; பிறகு அவர்கள் தங்களுடைய திட்டத்தை சங்கத்தாரிடம் எடுத்துச் சென்றிருந்தார்கள். இச்சமயத்தில் கோழைத்தனமான மிருகம் போன்ற சூழ்ச்சியானது சங்கத்தாரிடமிருந்தே தொடங்கியது. [10]இன்னமும் எருசலேமில் லீசியா சேனாதிபதியாக இருந்திருந்தால், அவர் பெஸ்துவிடம் இரு ஆண்டுகளுக்கு முன் நடந்த கொலைச் சூழ்ச்சியைப் பற்றிக் கூறியிருந்திருக்கலாம்; ஆனால் அந்தச் சூழ்ச்சியைப் பற்றி தேசாதிபதி எதுவும் அறிந்திருந்ததாகக் குறிப்பெதுவும் இல்லை. அவர் அறிந்திருந்தால், அதை நிச்சயமாக அவர் அகிரிப்பாவுடனான தமது தனிப்பட்ட உரையாடலில் குறிப்பிட்டிருந்திருப்பார் (வ. 14-21).

[11]புதிய அதிகாரியின் அனுபவமின்மையை அவர்கள் அனுகூலப்படுத்திக் கொள்ளவும், அவரது ஆளுகையை நல்ல முறையில் (தங்களுக்குச் சாதகமாக) தொடங்கிக் கொள்ளவும் அவர்கள் விரும்பினார்கள். இதை அப். 18ல் யூதர்கள் கல்லியோனை அணுகிய முறையுடன் ஒப்பிட்டு நோக்கவும் (18:12க்கான குறிப்புகளை "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் காணவும்). [12]Quoted in James Burton Coffman, *Commentary on Act* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1976), 467. [13]"The tribunal" என்பது நியாயாசனமான *bema*வைக் குறிக்கின்றது. (KJVயில் மற்றும் தமிழில் காணவும்.) இது ரோம அதிகாரமுடைமையின் அடையாளமாகும். அது அரண்மனைக்குள் இருந்திருக்க முடியும் என்றாலும், *bema* என்பது மண்டப முற்றம் ஒன்றில் அமைந்திருக்கலாம். இதை யோவான் 18:28 உடன் ஒப்பிட்டு நோக்கவும். மறுபடியும் அப். 18:12க்கான குறிப்புகளை "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் காணவும். [14]இந்தக் காட்சிக்கும், 17:5-8ன் காட்சிக்கும் இடையில் உள்ள இணைவைக் கவனிக்கவும். [15]யூதர்கள் தங்களின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் எதுவும் பெற்றிராதிருந்ததால், பவுல் தாம் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டால் மட்டுமே அவருக்கு தீர்ப்புக் கொடுக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அவர் தாம் "குற்றவாளியல்ல" என்று வேண்டிக் கொண்ட பொழுது பெஸ்துவால் உடனே பவுல் குற்றமற்றவர்

*என்று அறிவிக்கப்பட வேண்டியதாய் இருந்தது.* [16]*இராயர் (செசார்) என்று மொழிபெயர்க்கப் பட்ட கிரேக்க வார்த்தை Kaisar என்பதாகும். ஆதியில், "செசார்" என்பது ஜூலியஸ் செசாரின் குடும்பப் பெயராய் இருந்தது, ஆனால் பிறகு அது ரோமப் பேரரசர்களின் பட்டப்பெயராயிற்று.* [17]*Kurios என்ற கிரேக்க வார்த்தையே* "Lord" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதைப் பேரரசருக்குப் பயன்படுத்தும் போது, தெய்வீக தன்மையை மறைவாய் உணர்த்துகின்றது. (ஒரு ரோமர்தான் பேரரசரை* "Lord" [*ஆண்டவன்*] *என்று அழைத்தாரே தவிர ஒரு யூதரோ அல்லது கிறிஸ்தவரோ அவ்வாறு அழைக்கவில்லை என்பதை மனதில் வையுங்கள்.) சில பேரரசர்கள் இப்பட்டத்தை மேற்கொள்ளத் தயங்கி மறுத்தார்கள், ஆனால் அப்போதைய பேரரசரான நீரோ அதை மகிமையென்று நினைத்தார். பிற்காலத்தில் பல கிறிஸ்தவர்கள் பேரரசரை* "Lord" *(ஆண்டவன்) என்று அறிக்கையிட மறுத்ததால் வேதசாட்சியாக உயிர் துறக்க நேரிட்டது. தேவனுடைய பிள்ளையைப் பொறுத்த வரையில் ஒரே* "Lord" *(கர்த்தர்) தாம் இருக்கின்றார் (எபே. 4:5).* [18]Ernst Haenchen, quoted in I. Howard Marshall, *The Acts of the Apostles,* The Tyndale New Testament Commentaries, gen. ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980), 384. [19]*"ஒருவரும் என்னை அவர்களுக்கு* [*யூதத் தலைவர்களுக்கு*] *ஒப்புக் கொடுக்கலாகாது ..." (வ. 11) என்ற பவுலின் பதிலில் இருந்து இது தெளிவாகின்றது. பவுலுக்கு, "இல்லை, நன்றி; நான் எருசலேமுக்குப் போகாதிருப்பது என்று தேர்ந்து கொள்கிறேன்'' என்று பதில் கூற வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர் இராயருக்கு அபயமிடத் தேவைப்பட்டிருந்திருக்காது (28:19ஐக் காணவும்).* [20]*ஒரு ரோமக்குடிமகன் முதலாவது மக்களிடத்தில் அபயமிட்டார். பிறகு அபயமிடுதலை அவர் ரோம செனட் குழுவினிடம் செய்தார், அக்குழு, மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திற்று. அதன் பிறகு தான் அவர் மக்களின் பிரதிநிதியாய் இருந்த பேரரசரிடம் அபயமிட்டார்.*

[21]*இவ்விரு இலத்தீன் வார்த்தைகளுக்கு இணையான கிரேக்கச் சொற்கள் மூலப்பிரதியில் நாம் பெற்றுள்ளோம். சில வேளைகளில், பின்வரும் நீண்ட வடிவம் பயன்படுத்தப்பட்டது: Cives Romanus sum, provoco ad Caesarem.* [22]*செனகா என்பவர் கல்லியோனின் சகோதரர் ஆவார். "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 18:12க்கான குறிப்புகளைக் காணவும்.* [23]F. F. Bruce, *The Book of Acts,* rev. ed., The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 454. *கி.பி. 64/65ல் நீரோ கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தத் தொடங்கினார்.* [24]*"நான் இராயனுக்கு அபயமிட வேண்டிய தாயிருந்தது" என்று 28:19ல் பவுல் கூறியதைக் கவனிக்கவும்.* [25]*பிலி. 1:12-17ன்படி, பவுல் சிறை வைக்கப்பட்டது பற்றி ரோமாபுரியில் இருந்த சகோதரர்கள் கலப்பான உணர்வுகளுடன் இருந்தார்கள். அவர் விலங்கிடப்பட்டது பற்றிச் சிலர் சங்கடம் அடைந்தார்கள் என்பது உறுதி.* [26]*பவுல் ரோமாபுரிக்குச் செல்வார் என்ற இயேசுவின் வாக்குத்தத்தத்தை (23:11) பவுல் தாம் விடுதலையாகி ரோமாபுரிக்குப் பயணப்பட முடியும் என்று அர்த்தப் படுத்தியதாகத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கவும் சாத்தியம் உண்டு. இதற்கு முன்பும் கூட ஆவியானவருடைய எச்சரிக்கையை (20:22-25) பவுல் தவறாக விளங்கிக் கொண்டிருந்திருந்தார்; அவர், இயேசுவின் வாக்குத்தத்தத்தையும் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வாய்ப்புள்ளது.* [27]*பவுல் குற்றவாளியல்ல என்று காணப்பட்டு, விடுதலை செய்ய வேண்டியதாய் இருந்த நேரங்களுடன், கூடுதலாக பேலிக்ஸ் பலஸ்தீனத்தை விட்டுச் செல்லுகையில் தாம் விடுதலை செய்யப்படுவோம் என்று அவர் (பவுல்) எதிர்பார்த்திருக்கவும் கூடும். பொதுவாக, ஒரு தேசாதிபதி தமது பதவியை விட்டுப் போகும்போது, தம்மால் ஒரு முடிவு எடுக்கப்பட முடியாத எந்த ஒரு கைதியையும் விடுதலை செய்து விட்டுப்*

*போவது என்பது அவரது கடைசியான கருணைச் செயலாய் இருந்தது (அப். 24:27ஐக் காணவும்). [28]இது அகிரிப்பாவின் சொந்தக் கருத்து என்பதை நினைவில் வையுங்கள், அவர் இவ்வழக்கில் எல்லைகளுக்குள் இருந்ததில்லை. [29]தேசாதிபதி தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதில் நம்பிக்கையுள்ளவராய் இருந்தார் (25:17). அவர் உடனடியாகப் பவுலை எருசலேமுக்கு அனுப்பியிருந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அப். 28:19ல், மேற்கத்திய வசன நடையில், "நான் என் ஆத்துமாவை (உயிரை) மரணத்துக்குக் காத்துக் கொள்ளும்படி … இராயனுக்கு அபயமிட வேண்டியதாயிருந்தது" என்றுள்ளது. (பவுல் தம்மீது குற்றம் சாட்டியவர்களை எதிர்கொள்ளுகையில், பொதுவாக அவர் தம் மூலமாகத் தமக்குள் இருந்த ஆவியானவரைப் பேச அனுமதித்தார் என்பது பவுல் இராயருக்கு அபயமிட்டதில் தவறு செய்யவில்லை என்பதை நம்புவதற்கு இன்னொரு காரணமாகும் [மாற். 13:11].) [30]சோதனை என்பதற்கு 1 கொரி. 10:13ல் கிரேக்க மொழியில் peirasmos என்ற வார்த்தை காணப்படுகின்றது, இது புதிய ஏற்பாட்டில் உண்மையில் இரு வழிமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 கொரி. 10:13ல் அது* "temptation" *என்றும், யாக். 1:2ல்* "trials" *என்றும் பயன்பட்டுள்ளது. இவ்விரண்டில் எது எந்தவிடத்தில் உள்ளது என்பதைச் சந்தர்ப்பப் பொருளின்படி தான் தீர்மானிக்க வேண்டும்.* "Temptation" *என்றால் சாத்தானின் ஆதிக்கத்துக்கு உட்படுத்துதல், இது எப்பொழுதுமே சாத்தானிடமிருந்து தான் வருகின்றது (யாக். 1:13).* "Trials" *என்பது சில வேளைகளில் கர்த்தரிடத்தில் இருந்து வரும் "சோதித்துப் பார்த்தல்" ஆக இருக்கலாம், ஆனால் இது எப்பொழுதுமே நமது விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்காகத்தான் வருகிறதே தவிர அதை அழிப்பதற்காக வருவதில்லை. பிசாசானவன் நாம் தவறு செய்யும்படி சோதிக்கின்றான்; தேவன் நமது விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதற்காகச் சோதிக்கின்றார். ஒவ்வொரு சோதனையும் நாம் விசுவாசத்தில் பலப்படும் வழியொன்றுடனே வருகின்றது.*

[31]Ed Wharton, *The Action of the Book of Acts* (Dallas: Gospel Teachers Publications, 1977), 57. [32]*இதைப் பற்றிய ஒரு விளக்கத்திற்கு, யோபு புத்தகத்தின் முதல் இரு அதிகாரங்களைக் காணவும். சோதனைகள் நம்மைப் பெலப்படுத்தும்படி தேவன் அனுமதிக்கின்றார். [33]யோசேப்பு ஒரு கவனிக்கத்தக்க விளக்கமாய் இருக்கின்றார்: பாலியல் சோதனைகளைப் பொறுத்தமட்டில் தேவனுடைய "தப்பிக் கொள்ளும் படியான, போக்கு" என்பது சில வேளைகளில் அச்சோதனைகளை எதிர்த்து நிற்கப் பலம் தருகின்றது - ஆனால் யோசேப்புக்குத் தேவனுடைய "தப்பிக் கொள்ளும் படியான போக்கு" என்பதோ அவர் (யோசேப்பு) அதை விட்டு ஓடும்படியானதாக இருந்தது (ஆதி. 39:12)!*